மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ம் நாள் புதன்கிழமை

இ.மஎண்.01/2024
உள்
அசல் வழக்கு எண்.100/2023
--------

1. ராஜேஸ்வரி
2. ராஜாராமன் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

கெங்காதேவி ...எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனு என் முன்பு 01.11.2025–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. மோகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. இராஜேஸ், அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

<u>உத்தரவு</u>

இம்மனுவானது அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், அசல் வழக்குரையை Struck off செய்து உத்தரவிடக்கோரி கட்டளை 6, விதி 16 மற்றும் பிரிவு 151–உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2)**<u>மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டு சுருக்கம்:–</u>**

2.1. மனுதாரர் இந்த மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் பிரதிவாதிகள். தாவா அசல் வழக்கை எதிர்மனுதாரர்/வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக தபசில் 1, 2 இலக்க சொத்துக்களை அவர் அமைதியான முறையில் அனுபோகம் செய்து வருவதை பிரதிவாதிகள் எவ்வகையிலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தொடர்ந்து தாவா வழக்கு பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக 08.04.2024 ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/வாதி கணவர் யார், எந்த ஊரில் இருக்கிறார் என்பது வழக்குரையில் சொல்லப்படவில்லை. எப்படி வாரிசுரிமைப்படி வாதியின் கணவருக்குப்

பாத்தியப்பட்டது என்பதற்கு வாரிசு சான்றிதழோ, பாகப்பிரிவினை பத்திரமோ, ஒரு தீர்வை ரசீதோ தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் வாதியின் கணவர் தனக்குச் சொந்தமான தபசில் சொத்து குறித்து தபசில் சொத்திற்கு எவ்வகையிலும் சொந்தமில்லாத சம்பந்தமில்லாத இந்த வழக்கில் வாதிக்கு அவரது கணவர் பாலமுருகன் எந்தவிதமான பொது அதிகாரமும் முறைப்படி வழங்காமல் இந்த வழக்கை வாதி தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. தாவா வழக்கு மூலங்களுக்கும், தபசில் சொத்திற்கு சொந்தமில்லாத இந்த வாதிக்கும் எவ்விதமான தொடர்பும் சம்பந்தமும் இல்லை. சம்பந்தமில்லாத வாதி இந்த வழக்கை தாக்கல் செய்ய எவ்வகையிலும் உரிமையும், அதிகாரமும் இல்லை.

**2.2.** மேலும் வாதி தரப்பில் பிரதிவாதிகளுக்கு எவ்விதமான ஆவணங்களும் மனுதாரருக்கு கொடுக்கப்படவில்லை. இந்த வழக்கின் 1, 2 மனுதாரர்கள்/ பிரதிவாதிகளின் சொத்திற்கும் தபசில் சொத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. மேலும் வாதி 1, 2 பிரதிவாதிகளின் அருகிலுள்ள சொத்துக்களைப் பொறுத்து ஏதும் வழக்குரையில் சொல்லப்படவில்லை. கிராம வரைபடம் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி எதிர்மனுதாரர்/வாதி நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கில் தனக்கு சம்பந்தம் இல்லாத தபசில் சொத்து குறித்து சரியான ஆவணங்களின்றி நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்குடன் நீதிமன்றத்தில் வழக்கு மூலம் உற்பத்தி செய்து தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளார். தாவா எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்கானது விசாரணைக்கு உகந்ததல்ல. எனவே மனுதாரர்களால் மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**3. <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரை ஆட்சேபணையின் சுருக்கம் –</u>**

3.1. இந்த எதிர்மனுதாரரால் வியக்கத்தக்கமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர அபிடவிட்டில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்குப் புறம்பான காரணத்தால் அவை முற்றிலும் மறுக்கப்படுகிறது. மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு நியாயமான கட்சியும் இல்லை. அதனால் தாவா அசல் வாக்கினை மேல்நடத்தவிடாமல் காலதாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கில் உண்மைக்குப் புறம்பான சங்கதிகளை கொண்டு அடிப்படை ஆதாரங்களை கொண்டு தாவா மனுவை தாக்கல்

செய்துள்ளார்கள். எதிர்மனுதாரர்/வாதி கணவர் வேலை விஷயமாக வெளியூரில் குடியிருந்து வருகின்றார். இதன் தபசில் 2ம் லக்க சொத்து அமைந்துள்ள இடத்திலுள்ள வீட்டில் எதிர்மனுதாரர்/வாதி அவரது பிள்ளைகளுடன் குடியிருந்து அதன் அருகே உள்ள காலி இடத்தை நல்லமுறையில் பராமரித்து அனுபவம் செய்து வருகின்றார். எதிர்மனுதாரர்/வாதியின் இடத்திற்கு தெற்குபக்கம் அமைந்துள்ள இடத்தில் குடியிருந்து வரும் மனுதாரர்/பிரதிவாதி எதிர்மனுதாரர்/வாதிக்குப் பாத்தியப்பட்ட தபசில் சொத்தினை எதிர்மனுதாரர்/வாதியை நிம்மதியாக அனுபவிக்கவிடாமலும், எதிர்மனுதாரர்/வாதியின் இடத்திற்கு செல்லும் பாதையில் எதிர்மனுதாரர்/வாதியை இடையூறு செய்து தபசில் சொத்திலுள்ள எதிர்மனுதாரர்/வாதியின் அனுபவத்திற்கும் உரிமைக்கும் இடையூறு செய்து தபசில் 2ம் லக்க சொத்தில் செல்லவிடாமலும், ஆக்கிரமிக்க எத்தணித்து வந்துள்ளார்கள்.

3.2. அதன் காரணமாக கடந்த 01.11.2023ம் தேதியில் தபசில் 2ம் லக்க சொத்தின் தெற்குப் பகுதியையும், எதிர்மனுதாரர்/வாதியின் இடத்திற்கு செல்லும் பாதையையும் 1, 2 பிரதிவாதிகள் ஆக்கிரமிக்க எத்தணித்தார்கள். அதை வாதி தடுத்துவிட்டார். மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளின் சட்டத்திற்குப் புறம்பான செயலை எதிர்மனுதாரர்/வாதி தடுத்து விட்டதால் ஆத்திரமடைந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தபசில் 2ம் லக்க சொத்தின் தென்பகுதியை ஆக்கிரமிக்காமல் விடமாட்டோம் என்றும், தபசில் சொத்துக்களில் நிம்மதியாக குடியிருக்க விடமாட்டோம் என்றும் கூறி மிரட்டி சென்றுள்ளார்கள். மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளின் சட்டத்திற்குப் புறம்பான செயல்களினால் தபசில் சொத்தினை ஆக்கிரமித்தால் வாதிக்கு ஏராளமான கஷ்ட நஷ்டம் எதிர்மனுதாரர்/வாதியின் இடத்தை தொடர்ந்து அனுபவிக்க இயலாத நிலையும் ஏற்படக்கூடும் என்பதால் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தபசில் 1, 2 லக்க சொத்தினை எதிர்மனுதாரர்கள்/வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளோ அவரது வகையாட்களோ எவ்வகையிலும் இன்னலோ, இடையூறோ, ஆக்கிரமிப்போ வில்லங்கமோ செய்யாமல் இருக்க மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரி தாவா வழக்கினை வாதி தாக்கல் செய்துள்ளார்.

3.3. தாவா வழக்கை முழுமையாக தீர்மானிக்க இருதரப்பு சாட்சிகள் மற்றும்

சான்றாவணங்கள் மூலம் விசாரித்தறிந்தால் மட்டுமே முழுமையாக தீர்மானிக்க இயலும். தாவா அசல் வழக்கிடைச் சொத்து எதிர்மனுதாரர்/வாதியின் கணவருக்குப் பாத்தியப்பட்டது நாளது தேதி வரை எதிர்மனுதாரர்/வாதியின் அனுபவத்தில் இருந்து வரும் நிலையில் அதற்கு இடையூறு செய்த மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் சட்டத்திற்குப் புறம்பான செயலை தடுக்கும்பொருட்டு மட்டும் தாவா அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து தாவா வழக்கை மேல்நடத்த எத்தணிக்காமல் உண்மைக்குப் புறம்பான சங்கதிகளை கொண்டு தாவா வழக்கை தாக்கல் செய்தது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல. தாவா மனுவில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவும் கோரிய பரிகாரமும் தவறானது மற்றும் முரண்பட்டதாகும். தாவா மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. தாவா மனுவை தாக்கல் செய்ய மனுதாரருக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை. எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7) <u>**தீர்வு**</u>:–

7.1. மனு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் இந்த மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் பிரதிவாதிகள். அசல் வழக்குரையை Struck off செய்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர்கள் கூறும் காரணம் என்னவென்றால், வாதி தரப்பில் பிரதிவாதிகளுக்கு எவ்விதமான ஆவணங்களும் மனுதாருக்கு கொடுக்கப்படவில்லை. இந்த வழக்கின் 1, 2 மனுதாரர்கள்/ பிரதிவாதிகளின் சொத்திற்கும் தபசில் சொத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றும், மேலும் வாதி 1, 2 பிரதிவாதிகளின் அருகிலுள்ள சொத்துக்களைப் பொறுத்து ஏதும் வழக்குரையில் சொல்லப்படவில்லை. கிராம வரைபடம் தாக்கல் செய்யப்படவில்லை.

மேற்படி எதிர்மனுதாரர்/வாதி நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கில் தனக்கு சம்பந்தம் இல்லாத தபசில் சொத்து குறித்து சரியான ஆவணங்களின்றி நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்குடன் நீதிமன்றத்தில் வழக்கு மூலம் உற்பத்தி செய்து தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். எனவே மனு தாக்கல்.

7.2. எதிர்மனுதாரர் தன்னுடைய ஆட்சேபணையில், தாவா மனுவில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவும் கோரிய பரிகாரமும் தவறானது மற்றும் முரண்பட்டதாகும். தாவா மனுவை தாக்கல் செய்ய மனுதாரருக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை. எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

7.3. மனு பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பு ஆவணங்கள் மற்றும் வாதுரைகள் கேட்கப்பட்டது. இம்மனுவில் வாதியின் வழக்குரையை Struck Off செய்ய வேண்டி காரணிகள் (1) Abuse of process of court (நீதிமன்ற நடைமுறையை தவறாக பயன்படுத்துதல்) மற்றும் (2) Frivolous most vexatitious (அலைக்கழிக்கும் மற்றும் அர்ப்பதன்மையான வழக்குரைகள்) எடுத்துரைக்கப்பட்டது. ஆனால் அக்காரணிகள் இந்நீதிமன்றம் ஏற்புடையதாக இல்லை என்று தீர்மானிக்கிறது.

7.4. மேலும், Sathi Vijayakumar Vs. Totasingh and others 2006 13 SCC 353 மற்றும் K.K. Modi Vs. K.N.. Modi and others 1998 3 SCC 573 ஆகிய வழக்குகளில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் உரிமையியல் வழக்குகளில் வழக்குரையை கட்டளை 6 விதி 16 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின்படி சரியான காரணங்கள் இல்லாமல் Struck Off செய்வது வழக்கு விசாரணைக்கு முன்பே மதிப்பிடுதலுக்கு இணையாக கருதப்படும். எனவே வழக்கின் விசாரணையே தெளிவுபெற்ற தீர்வுக்கு வழிவகுக்கும். மேற்கண்ட காரணத்தினால் இந்த மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக, இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்கள் /பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.01/2024
உள்
அ.வ.எண்.100/2023
**உத்தரவு**
நாள்– 12.11.2025.